பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 05 ஞாயிற்றுக்கிழமை (16-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 81

# ஐ. தே. க. அரசியல்வாதிகள் பலரின் வீடுகள் கொழும்பில் கடும் சோதனை!

## புஞ்சிநிலமே, மகிந்த ரட்ணதிலக உட்பட பலர் இன்னும் தலைமறைவு

கொழும்பு, பெப்ரவரி 16

இரத்தினபுரி மாவட்ட எம். பி. நாலந்தா எல்லாவெல படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து பொலீஸார் நேற்று கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் 800 க்கும் அதிகமான வீடுகளில் சோதனை நடத்தினர். இவற்றில் ஐ. தே. க. உயர் அரசியல் பிரமுகர்களின் வீடுகளும் அடங்கும்.

எனினும் இரத்தினபுரி மாவட்ட ஐ. தே. கட்சி எம். பி. சுஸந்த புஞ்சிநிலமேயையோ அல்லது இரத்தினபுரி மாநகரசபையின் முன்னாள் மேயர் மகிந்த ரட்ண திலகாவையோ கைது செய்ய முடியவில்லை. அவர்கள் தொடர்ந்து தலைமறைவாகவே இருந்து வருகிறார்கள்.

பொலீஸார் நேற்றும் வெகுஜன தொடர்புச் சாதனங்கள் மூலம் தேடப்படும் நபர்கள் குறித்து அறிவித்திருந்தனர்.

எனினும் சுஸந்த புஞ்சிநிலமே மற்றும் மகிந்த ரட்ணதிலகா குறித்தோ கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் ஏனைய சில சந்தேக நபர்கள் குறித்தோ தகவல் எதனையும் அவர்களால் பெற முடியவில்லை.

ஐ. தே. கட்சியின் உயர் அரசியல் பிரமுகர்களின் வீடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டமாவடி மீது மீண்டும் ஆட்லறிஷெல் தாக்குதல்

### ஏழு பேர் காயமுற்றனர்

ஓட்டமாவடிக் கிராமத்தின் மீது வியாழக்கிழமை இரவு மீண்டும் பீரங்கி (ஆட்லறி) ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்தக் கிராமத்தின் மீது ஏற்கனவே கடந்த திங்கட்கிழமை பீரங்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

வியாழக்கிழமை இரவு நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் ஏழு முஸ்லிம்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒரு குழந்தையும் ஒரு பெண்ணும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம் ஊர்காவற்படை வீரர் ஒருவர் கடந்த வாரம் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஒட்டமாவடிப் பகுதியில் கலவரம் மூண்டதும் 11 பேர் கொலையுண்டதும் தெரிந்தவையே.

அப்பகுதியில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களினால் கோபமுற்றிருக்கும் விடுதலைப் புலிகளே முஸ்லிம் பகுதிகள் மீது பீரங்கி ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் குற்றஞ்சாட்டின.

(அ-உ-10-150)

## முச்சந்தி முரளி



அப்ப ஐ. தே. கவுக்கு போதாத காலம் போல......!

# இரத்தினபுரி நகரில் பல இடங்களில் நேற்றுத் தீவைப்புச் சம்பவங்கள்!

## நாலந்தாவின் இறுதிச் சடங்கில் பல்லாயிரக்கணக்கானோர்!!

கொழும்பு, பெப்ரவரி 16

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெலவின் இறுதிச் சடங்குகள் நேற்று இரத்தினபுரியில் இடம்பெற்ற போது, பல்லாயிரக்கணக்கானோர் அதில் கலந்து கொண்டனர்.

பல இடங்களில் தீ வைப்பு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

தீ வைப்புச் சம்பவங்களின் போது ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர்.

பொலீஸாரை நோக்கிக் கல் வீசியவர்களைக் கட்டுப்படுத்த கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று இரவு இரத்தினபுரி மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. இன்று காலை 6 மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று மாலை 5.00 மணியளவில் நாலந்தா எல்லாவெலவின் சிதைக்கு தீ மூட்டப்பட்டபோது அங்கு நிலவிய நிலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் நிதி இரகசியங்கள் அரச உயர் மட்டத்தின் கைகளில்!

### கணேசலிங்கத்தால் கொடுக்கப்பட்டுவிட்டனவாம்!!

கொழும்பு, பெப். 16

ஐ. தே. கட்சி பொருளாளர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் விலகிக் கொண்டுள்ள கே. கணேசலிங்கம் இதுவரை காலமும் கட்சியின் நடவடிக்கைகளுக்கு பெருமளவு நிதி கிடைத்து வந்த முறைகளையும், கட்சிக்கு வாரிக் கொடுத்து வந்த பிரமுகர்களின் விவரங்களையும் ஆளும் தரப்பின் உயர் தலைவியிடம் விலாவாரியாகத் தெரிவித்து விட்டார் என்றும் —

இதனால் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் குறித்து ஐ. தே. க. வட்டாரங்கள் குழம்பிப் போயுள்ளன என்றும் —

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று 'சாடை மாடையாகச்' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கணேசலிங்கம் சுயேச்சைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே தடவையில் ஆயிரம் பேர் திருமலையிலிருந்து வர வசதி

### கப்பல் சேவை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 16

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு ஒரே தடவையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக திருமலை பிரதேச செயலர் மேலும்மயிலும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கும் காங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கைதான மற்றும் விடுதலையான 34பேரின் விரங்கள் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், பெப்16

யாழ். மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டுகொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோர் மற்றும் விடுவிக்கப்பட்டோர் தொடர்பான 34 பேரின் விவரங்கள் யாழ். ஈ. பி. டி. பி. அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளன,

இவற்றில் 21 பேரின் விவரங்கள் 29.01.97 உதயனில் வெளியாகியிருந்தன.

ஏனைய 13 பேரின் விவரங்கள் வருமாறு:

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் கல்வி நிர்வாக முறை மாற்றம் தற்காலிகமாக நிறுத்தி வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். மாவட்டத்தில் கல்வி நிர்வாக முறையில் மேற்கொள்ளப்படவிருந்த மாற்றங்களை மாகாண கல்வி அமைச்சு தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது இயங்கும் இரு கல்வி வலயங்களை நான்காக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டதும்.

ஜனவரி மாதம் முதல் இத்திட்டம் அமுல் செய்யப்பட இருந்ததும் — தெரிந்தவையே.

இந்த மாற்றங்களைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சபாரட்னம் ரேவதி

கோண்டாவில் மிசன் பாடசாலை வீதியைச் சேர்ந்த திருமதி சபாரட்னம் ரேவதி (14-02-97) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சபாரட்னத்தின் அன்பு மனைவியும், ஜெயந்தியின் ஆருயிர்த்தாயாரும், நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த இளையதம்பி, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் பிரியமிகு மகளும், கோண்டாவிலைச்சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளுமாவார். அன்னாரின் பூதவுடல் (16-02-97) இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக, காரைக்கால் இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
செ. சபாரட்னம்
(கணவன்)

மிசன்பாடசாலை வீதி,
கோண்டாவில்
(45316)

## திருமதி கந்தசாமி அன்னபூரணம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாயில் வசித்தவருமாகிய கந்தசாமி அன்னபூரணம் 15-2-97 சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான புண்ணியமூர்த்தி- சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமிப்பத்தரின் அன்பு மனைவியும், கிருஷ்ணசாமி, தங்கராசா, கமலாதேவி, பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருசாம்பாள், திலகேஸ்வரி, சந்தனகோபால், நளாயினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், யசோதை, காசிப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் லெட்சுமி, முருகையா, சண்முகராசா, பாலசிங்கம் (துரை), நாகரெத்தினம் (குண்டுமணி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், துர்க்காம்பிகை, சுவர்ணா, யமுனாதேவி, கல்கிராஜ், கஸ்தனி, துளசிகரன், வாசுகி, அனுசியா, தீபன், சுகிந்தன், காந்தன், ரூபன், ரூபி, ரூபிகா, கபூரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தேனிகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-02-97) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல் :
க. கிருஷ்ணசாமி

தற்போதைய முகவரி;
லோட்டன் றோட்,
தம்பர் லேன்,
மானிப்பாய்.
(9290)

## கிழக்கில் விவசாயி சுட்டுக் கொலை

கொழும்பு, பெப். 16

வயலுக்குச் சென்றுகொண்டிருந்த விவசாயி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வெலிகந்த, மொறவ என்ற இடத்தில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

45 வயதுடைய திக்கிரி பண்டா என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவத்தை அடுத்து படையினர் தாக்குல் மேற்கொண்டதில் புலிகள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புலிகளுக்காக உளவுபார்த்தார் என்று சந்தேகத்தின் பேரில் தமிழ்ப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(இ-5)


## தேவை

புதிய, பழைய
T. V, Deck, Audio,
Genarators, A.C.Dynamo
தட்டச்சு இயந்திரங்கள்,
தேவை.
தொடர்பு:-
**North Ceylon Technical Institute,**
2nd Cross Street,
(45321) Jaffna.

## SHAMROCK

யா/ ஈச்சமோட்டை வீதி,

★ A/L 99-PURE/APP.
★ A/L 98, 99
கலை, வர்த்தகம்
★ ஆண்டு - 9, 10, 11
★ O/L - DAY CLASS
★ புலமைப் பரிசில் - 97

(45324)

## வடமராட்சி லயன்ஸ் கழகம் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல்

வடமராட்சி லயன்ஸ் கழகம் 19-1-97, 7-2-97, 8-2-97 ஆகிய தினங்களில் நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம்களில் பதிவு செய்த அனைவரும் கண் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுள் வசதி குறைந்த மக்களுக்கு வாசிப்பதற்கேற்ற மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வகையில் தகுதியுடையவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட, வருமான நிலைமை பற்றிய விண்ணப்பங்களை பிரதேச செயலர் ஊடாக அவர்களுக்கு வழங்கப்பட்ட கண்ணாடி விவரம் அடங்கிய ஆவணத்தின் (Prescription) பிரதியுடன் இணைத்து கீழ்க் குறிப்பிட்ட முகவரிகளில் தபால் மூலமோ, நேரிலோ சேர்ப்பிக்கவும்.

கண்படலம் (Cataract) அகற்றும் சத்திர சிகிச்சைக்குத் தெரிவு செய்யப்பட்டோர் பகுதி பகுதியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சத்திர சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்படுவர். இவர்கள் தங்கள் நிரந்தர முகவரிகளை உடனடியாக அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| | |
|---|---|
| **லயன். என். சோமசுந்தரம்,** | **லயன். க.தணிகாசலம்,** |
| கழகச் செயலாளர், | கழகத் தலைவர், |
| நகராட்சி மன்றம், | நாவலர் மடம், |
| பருத்தித் துறை. | நவிண்டில், |
| (சி/144) | கரவெட்டி. |


# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை செல்லப்பா

(அச்சுக்கோர்ப்பாளர், இரகுநாதையர் அச்சகம், கொக்குவில்)

கொக்குவில் பூநாறிமரத்தடியைப் பிறப்பிடமாகவும், தற்போது ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை செல்லப்பா காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (பத்தர்) துரையம்மா தம்பதிகளின் அன்பு மகனும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-02-97 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.விக்கினேஸ்வரி
(மனைவி)

122/6 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(45325)

## திருமதி லோகேஸ்வரி அம்மா இராமச்சந்திர சர்மா (குஞ்சம்மா)

கந்தரோடையை வதிவிடமாகவும் துன்னாலை வடக்கினைப் பிறப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரி அம்மா இராமச்சந்திர சர்மா 15 - 02 - 1997 சனிக்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் வி. இராமச்சந்திர சர்மாவின் அன்பு மனைவியும், வல்லிபுராலய பிரதமகுரு அமரர் கணபதிசாமிக் குருக்கள், திருமதி உருக்குமணி அம்மாவின் அன்பு மகளும், சுதர்சனக் குருக்கள், இராமச்சந்திரக்குருக்கள், புருஷோத்தமக் குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 16-02-1997 ஞாயிற்றுக்கிழமை காலை ''வல்லிபராலயம்'' துன்னாலை வடக்கு கரவெட்டி இல்லத்தில் நடைபெற்று பகல் 11.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்,

தகவல் :
க. புருஷோத்தமக்குருக்கள்
(விசாகன்)

(45320)

## திருமதி செல்லம்மா செல்லத்துரை

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மல்லாவியில் வசித்தவருமாகிய திருமதி செல்லம்மா செல்லத்துரை (09-02-1997) ஞாயிற்றுக்கிழமை மல்லாவியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா - விசாலாட்சி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ் சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், ஜெயபாலன் (யாழ் கல்வித் திணைக்களம், வலயம் - I), ஜெயராணி, இந்திராணி, பரமேஸ்வரன், குமரேஸ்வரன், புஸ்பராணி, தவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரா, ஏகாம்பரம், நரேந்திரன், ஹேமா, சிறீரதி, தயாபரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரதீசன், சதீசன், ஜசிந்தன், காந்தயுபன், கௌசிகா, நிரோஜன், நிலானி, பிரசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மல்லாவியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ ஜெயபாலன்
(மகன்)

50, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(45319)


# தொழிற் பயிற்சிகள்

றிப்பியறிங்

★ **றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக்**
சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் மற்றும் வேறு எலக்ரோனிக் பொருள்களின் தொழிற்பாடு, திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 8 மாதங்கள்

★ **ஏயர் கொண்டிசனிங்:**
சகல இன குளிர்சாதனங்களின் தொழிற்பாடு, அவற்றில் ஏற்படும் பழுதுகள் திருத்தப்படும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 6 மாதங்கள்

★ **றீவைண்டிங்:**
மோட்டர், டைனமோ, ரான்ஸ்போமர் போன்றன றீவைண்டிங் செய்யப்படும் முறை பற்றி பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 6 மாதங்கள்

★ **மோட்டார் சைக்கிள் றிப்பியறிங்:**
நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள் ஆகியன இயங்கும் முறை, பழுதுகள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 6 மாதங்கள்

G. C. E. (O/L) படித்தவர்கள் பயிற்சிகளில் சேர்க்கப்படுவர்.

**பயிற்சிகள் ஆரம்பம்: 21-02-97**

விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவைக்கு அருகில்)

குறிப்பு:
(I) எமது நிறுவனத்தில் றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் திருத்திக் கொடுக்கப்படுகின்றன.
(II) அன்ரனாக்கள் பொருத்திக் கொடுக்கப்படுகின்றன.
(III) றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் என்பனவற்றின் உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible]

# வடகொரிய அதிகாரி தப்பியோடி தென்கொரிய தூதரகத்தில் தஞ்சம்!

## திடுக்கிடும் தகவல்கள் அம்பலம்

சியோல், பெப். 16

வட கொரியா நாட்டின் கம்யூனிஸ கட்டமைப்பின் பிடியிலிருந்து தப்பி ஓடி சீனாவிலுள்ள தென்கொரிய தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள உயரதிகாரி குவாங் யாங்யோவ் வட கொரியாவின் இராணுவ இரகசியங்களைப் பற்றித் திடுக்கிடும் தகவல்களைவெளியிட்டு வருகிறார்.

தென்கொரியாவை வேவு பார்க்கும் நோக்கமாக வட கொரிய இராணுவ உளவாளிகள் சுமார் 50 ஆயிரம் பேர் தென்கொரியாவுக்குள் ஊடுருவி அங்கு பல மட்டங்களிலும் நிலை கொண்டுள்ளனர் என அவர் தெரிவித்ததாக தென் கொரியச் செய்தித் தாள்கள் முதற்பக்கச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இச் செய்தி தென் கொரிய மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ளது,

இந்தச் செய்தி உண்மையாக இருப்பின் தென் கொரியாவின் பாதுகாப்பு என்பது ஒரு மாயை போன்றதே என எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

இதே வேளை —

தென் கொரிய அதிபர் தற்போது மாட்டிக்கொண்டிருக்கும் பெரும் ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து மக்களைத் திசைதிருப்புவதற்காக இந்த வடகொரிய அதிகாரியின் அரசியல் தஞ்சம் நாடகமாக்கப் படுகிறது என தென்கொரிய எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

### உயிர்துறக்கப் போவதாக அச்சுறுத்தல்

தென் கொரியாவுக்குச் செல்லும் தனது எண்ணம் நிறைவேறா விட்டால் தான் பீக்கிங்கிலுள்ள தென்கொரியத் தூதரகத்திலேயே உயிரை விடப்போவதாக அங்கு தஞ்சமடைந்துள்ள குவாங் யாங் யோவ் தெரிவித்துள்ளார்.

வேறு எந்த நாட்டுக்கும் செல்ல தான் தயாராக இல்லை என அவர் தெரிவித்தார்.

யோவ் சைப்பட எழுதிய அறிக்கையை தென்கொரிய தூதரகம் வெளியிட்டுள்ளது.

பெரும்பாலான மக்கள் பசியால் மடியும் வேளையில் சிறந்த சித்தாந்தத்தை வகுத்துவிட்டதாக மார்தட்டிக் கொள்வதை வட கொரியா நிறுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

# அமெரிக்க விமானிகள் வேலை நிறுத்த முஸ்தீபு!

## விமான சேவை இன்று ஸ்தம்பிக்கும்?

உலகில் மிகப்பெரிய விமானப் போக்கு-வரத்து நிறுவனமான அமெரிக்கன் எயர்லைனைச் சேர்ந்த விமான மோட்டிகள் அமெரிக்க நேரத்தின்படி இன்று அதிகாலை 12.01இற்குவேலை நிறுத்தத்தில் குதிப்பது எனத் தீர்மானித்துள்ளனர்.

அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம மற்றும் வசதிகள் போதுமானதாக இல்லை என்பதே இந்த வேலை நிறுத்தத்திற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பில்கிளின்ரன் இவ்விடயத்தில் தலையிட்டு தனது விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி வேலை நிறுத்த முயற்சியை நிறுத்தாவிடின் விமானமோட்டிகள் கட்டாயமாக வேலை நிறுத்தத்தில் குதிப்பர் என்பது உறுதியாகி விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்டபடி வேலை நிறுத்தத்தில் விமான மோட்டிகள் குதித்தால் பல்லாயிரக்கணக்கான விமானப் பயணிகள் இன்று இடைநடுவில் தவிக்கவேண்டியிருக்கும் என அஞ்சப்படுகிறது.

எனினும் கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி பில்கிளின்ரன் இவ்விடயத்தில் தலையிடுவார் என வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-10)

## சுரங்க ஊழியர் மனித சங்கிலிப் போராட்டம்

பொன், பெப். 16

ஜேர்மன் நாட்டு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள், அவர்களது குடும்பத்தினர், அவர்களது ஆதரவாளர்கள் என சுமார் ஒரு லட்சம் பேர் இணைந்து 100 கிலோமீற்றர் தூர மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றினை நடத்தினர்.

ஜெர்மன் அரசு சுரங்கத் தொழிலுக்கு அளித்துவரும் மானியத்தை ரத்துச் செய்வதென எடுத்த தீர்மானத்தை எதிர்த்து இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.

(ஐ-10)

## பூமியின் அளவு

லண்டன், பெப். 16

இந்த உலகத்தின் அளவு இதுவரை கணிக்கப்பட்டிருந்ததை விட 10 சதவீதம் பெரிதாக இருக்கக்கூடும் என ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்

(ஐ-10)

# புதுடில்லி நகரில் புகைகக்கும் வாகனங்களை அழித்து விடுங்கள்

## தொழிலதிபர்கள் கோரிக்கை

புதுடில்லி, பெப். 16

புதுடில்லி வீதிகளில் ஓடிக் கொண்டிருக்கும் வாகனங்களில் 1987 ஆம் ஆண்டிற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வாகனங்கள் அத்தனையும் தடைசெய்யப்பட வேண்டும் என்று புதுடில்லியில் உள்ள தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

டில்லி நகரம் புகைமண்டலமாக மாறுவதற்கு இந்த வாகனங்கள் பெருமளவில் புகை கக்குவதே காரணம்என அவர் தெரிவித்தார்.

சுற்றுப்புறச் சீர்கேட்டுக்கு உலகிலேயே மிகவும் மோசமான நகரம் எனப் பெயர் பெற்றுள்ள புதுடில்லியில் சுமார் 26 லட்சம் வாகனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

(ஐ-10)

## உலக அரங்கில்

### புகழாரம்

பொருளாதாரத் துறையில் இந்தியா ஒரு வல்லரசாக மாறவேண்டுமாயின் அது ஜப்பானை முன்னோடியாகக் கொள்ள வேண்டும் என இந்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தொழிலதிபர்கள் கூட்டம் ஒன்றில் பேசும் போது தெரிவித்தார்.

(ஐ-10)

## போராளிகள் விதிக்கும் நிபந்தனை

லீமா, பெப். 16

பெருநாட்டில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கு உணவு விநியோகம்செய்யும்பெரும்திட்டமொன்றினை உருவாக்கி அதனை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என 72 வெளிநாட்டுப் பணயக்கைதிகளை தடுத்து வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்கள் அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது நிபந்தனை விதித்துள்ளனர்.

பணயக் கைதிகளை உடனடியாக எதுவித உயிரிழப்புமின்றி விடுவித்தாக வேண்டும் என்ற ஜப்பானின் அழுத்தத்திற்கு ஆளாகியிருக்கும் பெரு அரசு இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளும் என நம்பப்படுகிறது.

(ஐ-10)

# விசாரணையின் போது கைதிகளின் கண்ணுக்குள் மிளகாய்த் தூள்!

## 7 பேர் பார்வையிழந்தனர்

புதுடில்லி, பெப். 16

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் ராஜ்கோட் நகரில் ஏழு கைதிகள் பொலிஸ் விசாரணையின் போது தங்கள் கண் பார்வையை இழந்து விட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மிளகாய்த்தூள் கலக்கப்பட்ட சில பொருள்கள் கைதிகளின் கண்களுக்குள் போடப்பட்டிருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நிரந்தரமாகவே கண் பார்வையை இழந்து விடுவார்களா என்பது குறித்து இப்போது எதுவும் கூற முடியாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இக் கொடுமையை இழைத்த பொலீஸார் யார் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன் என்று மாநில பொலீஸ் கமிஷனர் தெரிவித்தார்.

(ஐ)

# தமிழர்களை வெறுப்புடன் நோக்கும் தென்னிலங்கை அரச அதிகாரிகள்!

இலங்கையில் புரையோடிப் போயிருக்கின்ற இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில், அரசாங்க அதிகாரிகள் நடந்து கொள்ளும் விதம் மற்றும் அரசாங்க அலுவலகங்களில் நடக்கின்ற சம்பவங்கள் தமிழ் மக்களிடையே பெரிதும் விசனத்தை ஏற்படுத்தி வருகின்றன.

கொழும்பு மாநகரில் அரசாங்க அதிகாரிகளின் அலுவலகங்களில் சிலர் இனத்துவேஷத்துக்கு தூபமிடுபவர்களாகவே செயல்படுகின்றனர். ஒரு சில சிங்கள அதிகாரிகளுக்கு அலுவலகங்களில் தமிழ் பேசுவதைக் கேட்டாலே சகிக்க முடியாத நிலை நிலவுகிறது.

### மஹரகம ஆஸ்பத்திரி சம்பவம்

அண்மையில் கொழும்பு மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் நடந்த சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பெரிதும் வேதனையை ஏற்படுத்தியிருக்கின்றன.

இலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் தமிழ்க் கிராமமான பாண்டிருப்பில் இருந்து புற்று நோயினால் பீடிக்கப்பட்ட சிறுமி ஒருவர் மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இரண்டு நாள்களாக புற்றுநோயினால் அவதியுற்று உணவு உண்ண முடியாமலிருந்த அந்தப் பத்து வயதுச் சிறுமிக்கு எவ்வித சிகிச்சையும் வழங்கப்படவில்லை.

சிறுமியின் வேதனையையும் அவஸ்தையையும் தாங்க முடியாத தாயார் மருத்துவமனை உயரதிகாரியான ஒரு பெண்ணிடம் முறையிட்டுள்ளார்.

அதற்கு அந்தப்பெண் "ஏன் இங்கு வந்து எங்களுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? பிரபாகரனிடம் போய் மருந்து கேட்க வேண்டியது தானே" எனக் கடிந்து கொண்டார்.

எனினும் அந்தத் தாயார் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தன் மகளுக்காகக் கெஞ்சி அழுதும் கல்மனம் கொண்ட அந்தப் பெண் தாதி உணவு எதனையும் வழங்கவில்லை. பின்னர் கடிந்து கொண்டு ஏதோ மருந்தொன்றை அப்பெண் சிறுமிக்குக் கொடுத்தார். ஆயினும் அந்தச் சிறுமியின் உயிர் சற்றுநேரத்துக்குப் பின் பிரிந்து விட்டது. உரிய நேரத்தில் மகளுக்கு மருந்து கொடுக்கப்பட்டிருந்தால் அவளது உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் என சிறுமியின் தாயார் கதறியழுதார்.

இன்னுமொன்றையும் அந்த தாயார் தெரிவித்தார். கல்முனையிலிருந்து மஹரகம

> பி. பி. ஸி தமிழோசையில் ஒலிபரப்பான க. குணராஜா எழுதிய "இலங்கைமடல்" இங்கே தொகுத்துத் தரப்படுகிறது.

மருத்துவமனை சென்ற அவருக்குச் சாப்பாட்டுக்குக் கூட வெளியில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஏனென்றால் அவர் புலிப் பிரதேசத்தில் இருந்து வந்தவர் ஆவார்.

### இரத்தம் வழங்க முன் வந்தவர் மீது தாக்குதல்

இது இவ்வாறிருக்க இதே மருத்துவமனையில் நடந்த [illegible] இதனை "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை முக்கியத்ததுவம் கொடுத்து பிரசுரித்திருந்து.

கடுமையான புற்று நோயால் பீடிக்கப்பட்ட மலையகத்தைச் சேர்ந்த இந்திய வம்சாவழித் தலைவர் ஒருவரும் மஹரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்காக இரத்தம் தேவையென டாக்டர்கள் கூறியிருந்தனர் எனவே நோயாளிகளுக்கான இரத்தம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதன்படி குறிப்பிட்ட தினத்தன்று புற்றுநோயினால் பீடிக்கப்பட்ட அந்தத் தமிழருக்கு இரத்தம் வழங்க முன்வந்தவர் வைத்தியசாலையில் இருந்த சிலரால் தாக்கப்பட்டார். இவர் படுகாயம் அடைந்தார் எனக் கூறப்படுகின்றது.

### துவேசம் உள்ள அரச அதிகாரிகள்

இதேபோல கொழும்பில் உள்ள அரசாங்க அலுவலகங்களில் இன்றும் சில சம்பவங்கள் நடக்கின்றன.

அலுவலகங்களில் முக்கிய பொறுப்புக்களில் இருக்கும் தமிழர்களுக்குத் திடீர் இடமாற்றங்கள் புயர்வுகள் அல்லது பொறுப்புகள் மாற்றப்படுகின்றன. கேட்டால் பாதுகாப்புக் காரணங்களுக்காகச் செய்யப்படுகின்றன என்கிறார்கள். மேலிடத்து உத்தரவு என்றும் கூறுகிறார்கள்.

ஆனால், அரசாங்க உயர் மட்டத்தைக் கேட்டால் அப்படி அறிவித்தல்கள் எதனையும் நாம் விடுவிக்கவில்லையே என்கிறார்கள்.

ஆராய்ந்து பார்க்கின்ற போதுதான் தெரிகிறது இது அரசாங்கத்தின் வேலைகள் இல்லை என்பது.

இது அரசாங்க உயரதிகாரிகளின் தன்னிச்சையான செயல் என்று தெரிகிறது.

இப்படியான செயல்களை ஜனாதிபதி கண்டித்ததோடு தான்தோன்றித்தனமான செயல்களில் அதிகாரிகள் ஈடுபட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்,

### தமிழ் அதிகாரிகள் கைது

இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவுபவர்கள் அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள என்று குற்றஞ்சாட்டப்பட்டு பல தமிழ் அதிகாரிகள் இராணுவத்தால் கைது செய்யப்படுகின்றனர்.

இப்படியான செயல்கள் வேறு அதிகாரிகளால் தமிழர்களுக்கு வைக்கப்படும் ஆப்போ என்று தமிழ் அதிகாரிகள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது,

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்குக் கரையில் மணல் அள்ளத் தடை விதிப்பு

வடமராட்சி, பெப். 16

வடமராட்சி வடக்கு கரையோரங்களில் மணல் மண் அள்ளுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.

இப்பகுதிக் கரையோரங்களில் மணல் அள்ளுவது அதிகரித்துள்ளது. சிமெந்து கட்டட வேலைகளுக்காக பெருமளவு மணல் மண் வெட்டி எடுக்கப்படுவதால் கடல் நீர் உட்புகும் ஆபத்து உருவாகியிருக்கிறது.

கற்கோவளம், வல்லிபுரம் பகுதிகளில் மணல் பெருமளவில் அள்ளப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து இப் பகுதிகளில் அனுமதியின்றி மணல் அள்ளுவதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

(ஐ-173)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 — 05 — 1924

மறைவு: 16 — 02 — 1996

### அமரர் சின்னத்தம்பி செல்லப்பா

(ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்)

எங்கள் மீது அன்புயிராய்த் திகழ்ந்து, அறிவால் பண்பால் எங்களை வழி நடத்திய எம் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று போனாலும் உங்கள் முகத்தினை மறக்கமுடியவில்லையே! உங்கள் பிரிவால் தவிக்கிறோம். இறைபாதம் அடைந்த உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்:
சோமரட்ணம் தவமணி
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

(9274)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நெஞ்சம் மறவா அறம்பல புரிந்து
தஞ்சம் சிவனடி என எமைப் பிரிந்த



அன்னைமடி: 05 — 05 — 1916

அரனடி: 28 — 02 — 1996

### அமரர் இராமலிங்கம் முருகேசு

(முன்னாள் வர்த்தகர், நாவலப்பிட்டி கினிகத்தெனை)
(ஸ்தாபகர், ஜமுனா ஸ்ரோர்ஸ், நெல்லியடி)

**திதி: 16 - 02 - 1997**

அன்பான தந்தையே, எனைப்பெற்ற தெய்வமே!
பாசப்பிணைப்பால் எமைவளர்த்த தெய்வமே!
பெற்றெடுத்த தாயாரோ உலகம் தன்னைப்
புரியாத இளவயதில் விட்டு மாண்டார்.
பற்று நிறைந்திட்ட தெய்வம் ஆன அப்பா!
பாசத்தை இருமடங்காய் பெருக்கினீர்கள்.
கற்றவித்தைதனை எனக்கும் காட்டி வாழ்வில்
கச்சிதமாய் இருக்க வழிகாட்டினீர்கள்.
உற்ற துயர் மனத்தடக்கி ஓம் காரன்தன்
ஒளிப்பாத பேறமைக என்பேன். சாந்தி!

**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.**

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(45222)

# வேலை வங்கி படிவங்கள்

தென்மராட்சி, பெப். 16

தென்மராட்சி, பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வேலையற்றிருப்போருக்கான தொழில் வங்கிப்படிவங்கள் செயலக திட்டமிடல் பிரிவினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்முறை படிவங்கள் செயலக திட்டமிடல் பிரிவுகளிலேயே வழங்கப்படுவதால் அந்தந்தப்பிரிவு கிராம அலுவலரின் கடிதத்தைச் சமர்ப்பித்துப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தொழிலாளர் கல்விப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையிலான சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/விரிவுரையாளர் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **1997 - 03 - 21** திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1: ரூபா 13, 575/- (நிலையானது) மாதமொன்றுக்கு

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11: ரூபா 11, 500/- (நிலையானது) மாதமொன்றுக்கு

விரிவுரையாளர்: ரூபா 6, 900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபா வைச் செலுத்தி பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளை சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23x10 ச.மீ. அளவுடைய சுய முகவரியிட்ட இரண்டு ரூபா ஐம்பது சதம் பெறுமதியான முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[illegible]

# வளலாய்ப் பகுதியில் மீண்டும் மக்கள் குடியமர ஏற்பாடு

வடமராட்சி, பெப். 16

வளலாய்ப் பகுதியில் மீண்டும் மக்கள் குடியேற வசதியாக அங்கு செல்லவிருக்கும் குடும்பங்களின் விவரங்கள் தற்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

வளலாய்ப் பகுதியில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிடுவதற்கு மட்டுமே கடந்த சில நாள்களுக்கு முன் மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வளலாய் பகுதியில் சுமார் 95 சதவீதமான வீடுகள் சேதமடைந்து அல்லது முற்றாகச் சேதமடைந்து இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வளலாயை அண்டிய தம்பாலை, கதிரிப்பாய் பகுதிகளுக்கு மக்கள் குடியமர ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இடைக்காடில்பாடசாலை, ப. நோ. கூ. சங்கக்கிளை, தபாலகம் என்பனவும் இயங்குகின்றன. (ஐ-15-173)

# வேலணையில் எரிபொருள் நிலையம்

நெடுந்தீவு, பெப். 16

வேலணை, வங்களாவடியில் உள்ள எரிபொருள் விநியோக நிலையம் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

வேலணை ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள விவசாயிகள், கடற்றொழிலாளர்களது நன்மை கருதி இந்த எரிபொருள் நிலையத்தை புனரமைக்க ஊர்காவற்றுறை படை அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார். (ஐ-111)

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### இரத்தினசபாபதிஐயர் பேரம்பலநாதையர்

(பருத்தித்துறை ப. நோ. கூட்டுறவுச்சங்க செயலாளரும், பிரதம லிகிதரும்)

01-02-97 அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் பாசான சபிண்டி பூசையும், மதிய போசனமும் இன்று 16-02-97 எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் சகலரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

● இறுதிக் கிரியைகளை முன்னின்று நடத்திய பருத்தித்துறை ப. நோ. கூட்டுறவுச் சங்க நெறியாளர்கள், பணியாளர்கள், ஊழியர் தொழிற்சங்கம், ஊழியர் நலன்புரிச்சங்கம் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

**மனைவி, பிள்ளைகள், மைத்துனர் (மூர்த்தி).**

எல்லை ஒழுங்கை,
கற்கோவளம், பருத்தித்துறை.

(45232)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி அன்னமுத்து குலசிங்கம்

(நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி)

மலர்வு: 26 — 8 — 1932

உதிர்வு: 28 — 2 — 1996

**திதி: 16 - 2 - 1997**

நேசத்தால் பாசத்தல் அரவணைத்தாய்
அனைவரையும்
ஒப்பற்ற குடும்பமென உலகத்தை அதிசயித்தாய்
மாண்பு மிகு மனைவியாகி அகிலம் போற்றும்
அம்மாவானாய்
பண்பான மாமியுமாய் பாசமிகுபேர்த்தியுமாய்
எம்குலத்தின் முத்துமானாய்
இமயமாய் வாழ்ந்தமையால் இறைவனே
உனைச் சேர்த்துக் கொண்டான்
மறுபிறப்பு நாமெடுத்து வந்திடுவோம் உன்னிடமே
நீங்காது உங்கள் நினைவு மாறாது எங்கள் துயரம்

சோகத்தால் வாடும்:
**கணவன், மகன், மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(44983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] நூலகம்

# இடப் பெயர்வின் விளைவை நன்கு படம் பிடித்து ஆவணமாக்கும் நூல்

வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக 1995 ஆம் ஆண்டின் பிற்கூற்றில் 'யாழ்ப்பாண இடப்பெயர்வு' அமைந்தது. மக்கள் இடப்பெயர்வு வலிகாமத்திலிருந்து தென்மராட்சி, வடமராட்சி, வன்னி நிலப்பரப்பு எனும் மூன்று திசைகளில் விரிந்து சென்றதுடன் ஏறத்தாழ ஆறுமாத கால இடைவெளியின் பின்னர் மீள் இடப்பெயர்வினையும் உள்ளடக்கி நிற்கின்றது. இம் மீள் இடப்பெயர்வானது பூரணமாயிற்று எனக் கூறமுடியாத வகையில் வன்னி நிலப்பரப்பிலிருந்து தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நிலைமையில், அதுவும் இடப்பெயர்வு நிகழ்வானது எல்லோர் மனங்களிலும் நினைவலைகளைத் தொடர்ந்து மீட்டிக் கொண்டிருக்கின்ற வேளையில், கலாநிதி கா. குகபாலன் அவர்களின் 'யாழ்ப்பாண இடப்பெயர்வு' நூலானது பலரையும் வியப்பில் ஆழ்த்தாமலிருக்க முடியாததாகும்.

இன்றைய சூழலில், அதுவும் கல்விச் செயற்பாட்டில் ஒரு தேக்க நிலையை உடைக்கும் வகையில் அண்மைக்கால நிகழ்வு பற்றிப் பல தரவுகளுடன் கூடிய ஆக்கமாக, குறிப்பாக ஆசிரியரின் கூற்றில் ஆவணப்படுத்துகின்ற நோக்கமாக இந்நூல் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அண்மைக்கால நிகழ்வைச் சூட்டோடு சூடாக நூலுருவில் வெளிக்கொணர்ந்த முயற்சி முதற்கண் பாராட்டப்பட வேண்டியதாகும்.

பல இன்னல்களை எதிர்கொண்டு இடப்பெயர்வு எனும் சுமையினைச் சுமந்தனுபவித்த அனுபவம் ஆசிரியரின் எழுத்தோட்டத்தில் பிரதிபலிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு இடப்பெயர்வின் விளைவால் எழுந்த யதார்த்தச் சூழலை இந்நூல் ஊடாக வாசகனுக்குப் படம் பிடித்துக் காட்டுகின்ற பணியில் குறிப்பிடத்தக்க வகையில் வெற்றி பெற்றுள்ளார் எனக் கூறத் தோன்றுகின்றது.

இடப்பெயர்வின் காரணமாக எழுந்த மனித உறவுப் பிரச்சினைகளையும் மனித உறவில் ஏற்படும் விரிசலுக்கான அடிப்படையான காரணிகளையும் தெளிவுற எடுத்தாளுவது நோக்குவதற்குரிய ஒன்றாகும். எனினும் ஆசிரியராகவும் இடப்பெயர்வாளனாகவும் இரு பாத்திரங்களை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் சிற்சில இடங்களில் தனிமனித கருத்துக்கள், எண்ணங்கள், பொதுமைப்படுத்தப்படாத வகையில் ஆசிரிய நோக்காக இடம்பெறும் தன்மையும் அவதானிக்கக் கூடியதாகும்.

'யாழ்ப்பாண இடப்பெயர்வு' நூலானது ''தமிழர்களின் அரசியல் உரிமையை வென்றெடுக்கப்படுவதுடன் தொடர்புடையதென்ற போதிலும் அரசியல்

## நூல் வரிசை

காரணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது இடப்பெயர்வினால் மக்கள் அனுபவித்து வரும் சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகளைப் பற்றியதாகவே உள்ளதென'' ஆசிரியர் உரை வழி எழுத்தாளப்படுகின்றது.

உதாரணமாக, வடக்கு-கிழக்கு இனவிடுதலைப் போராட்டத்தின் விளைவாக வடமாகாணத்திலிருந்து ஏறத்தாழ 75,000 முஸ்லீம் மக்கள் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது எனச் சுட்டும்போது எக்காலகட்டத்தில் வெளியேறினார்கள் என்பது போன்ற தகவல்கள் ஆவணப்படுத்துவதில் பயனுடையதாக அமைந்திருக்கும்.

இடப்பெயர்வு பற்றித் தெளிவுபடுத்துகையில் ஆசிரியரால் இராணுவப் பிடிக்குள் சிக்குறாது வாழும்பொருட்டு மக்களால் மேற்கொள்ளப்பட்ட இடப்பெயர்வே ''வலிகாமம் இடப்பெயர்வு'' அல்லது ''யாழ்ப்பாண இடப்பெயர்வு எனலாம் என விளக்கப்பட்டுள்ளது. எனினும் மீள் இடப்பெயர்வு பற்றிய விளக்கமானது மேற்சுட்டிய விளக்கத்தை விலக்கிச் செல்வதாக அமைவது நோக்கத்தக்கது.

எதிர்பாராத இடப்பெயர்வு வாழ்வானது வெவ்வேறுபட்ட கோணங்களினின்றுநோக்கப்பட்ட தன்மை இந்நூலில் சிறப்புக்குரியதாகும். இடம்பெயர்ந்துவாழ்ந்த போதில் மக்கள் எதிர்நோக்கிய வதிவிடப் பிரச்சினைகள், கல்வி செயற்பாடுகளில் எழுந்த நோக்கநிலை, தொழில் நிலையில் மக்கள் எதிர்நோக்கிய பொருளாதாரச் சிக்கல்கள், மற்றும் சமூக, கலாசார, பண்பாட்டுக் சோலங்கள் ஆகியவற்றின் பின்னணியில் சந்தித்த சிரமங்கள், அவலங்கள் ஆகியன புள்ளிவிவரத் தரவுகளோடும், காத்திரமான தகவல்களோடும் இணைந்து அளிக்கப்பட்டவை, சாதாரண வாசகனையும் ஆர்வத்தோடு அறியத் தூண்டுவனவாகும். இது ஆசிரியர் குடித்தொகை கல்வியில் கொண்டிருக்கும் ஈடுபாட்டினையும் புலமையையும் புலப்படுத்தச் சான்றாக அமைந்துள்ளது எனலாம்.

உடனுக்குடன் நிகழ்கின்ற விடயங்களை அறிவியல் கண்ணோடு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமெனும் ஆசிரியரின் அவாவை இந்நூல் பூரணப்படுத்த முயன்றுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

கலாநிதி நா. ஞானகுமாரன்


# வரவேற்கின்றோம்

எமது பகுதி கல்வி வலயம் ஒன்றின்
கல்விப்பணிப்பாளராக பொறுப்பேற்றிருக்கும்.

திரு. சு. இரத்தினராசா

(B. A. DiP - in - Ed. S. L. E. A. S)

அவர்களை நாம் பாராட்டி வரவேற்கின்றோம்

இறை ஆசி வேண்டி நிற்கும்!

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர் சங்கம்.

யாழ். மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்.

(சி-140)


## மரக் கன்றுகள் விநியோகம்

வடமராட்சி, பெப். 16

வடமராட்சி வடக்கில் எலுமிச்சை, தோடை, பப்பாசி, அகத்தி போன்ற பயன்தரு மரக்கன்றுகள் தற்போது இலவசமாக விநியோகிக்கப் படுகின்றன.

கிராம சேவையாளர்களின் சிபார்சுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்தில் இவை விநியோகிக்கப் படுகின்றன. (ஐ-173-15)

## விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 16

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற டிரக் - சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மிருசுவிலைச் சோந்த சி. தர்மரத்தினம் (வயது 45) என்பவரே படுகாயமடைந்தவராவார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## உதவிப்பணம் மீளாய்வு

தென்மராட்சி, பெப். 16

பளைப் பிரதேசத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான மீளாய்வு விசாரணைகள் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனனால் கடந்த புதன் கிழமை முதல் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. (ஐ-117)

## மகளிர் அபி. நிலையம் உதவி

யாழ்ப்பாணம் பெப். 16

வருமான ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 15 குடும்பங்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் கோழிக் குஞ்சுகளை கால் நடை அபிவிருத்தி நிலையத்தில் இருந்து பெற்று இலவசமாக வழங்கியுள்ளது. (இ)

## சமய சந்நிதிகளில்

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவ வசந்தோற்சவம் இன்று ஞாயிறு மாலை நடைபெறுகிறது. (ஐ-30)

★ ★ ★

கரவெட்டி யார்க்கரு வரசித்தி விநாயகர் கோயிலில் இன்று காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை ஏகதின இலட்சார்ச்சனை நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

சங்கானை நிகரை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த திருமஞ்சத் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி சந்திரசேகரர் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவ திருமஞ்சத்திருவிழா நாளை நடைபெறுகிறது. (ஐ-30)

# உரிய சிகிச்சை இன்றி காச நோயாளி மரணம்!

சாவகச்சேரி, பெப். 16

காசரோகத்தினால் பீடிக்கப்பட்ட நோயாளி ஒருவர் உரிய சிகிச்சை ஈடைக்காததால் மரணமாகியுள்ளார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அண்மையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி காச நோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் 11 நாள்கள் அங்கு தங்கிச் சிகிச்சை பெற்றுவந்தார். ஒரு கட்டத்தில் அவரதுநிலைமை மோசமடைந்தது அவகை மேலதிக சிகிச்சைக்கார யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படாததால் நோய் முற்றியநிலையில் அவர் அங்கு மரணமானார். (ஐ-31)

## சாவகச்சேரியில் பால்சாலை

சாவகச்சேரி, பெ. 16

கூட்டுறவுச் சங்கத்தால் சாவகச்சேரி பொதுச் சந்தையில் பால்சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை செயலாளர் சி. நடராசா கடந்த 10 ஆம் திகதி இதனை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். (இ-31)

# மந்தைக் கூட்டத்தின் நடுவே ஷெல் விழுந்து வெடித்தது!

## எட்டு ஆடுகள் உடல் சிதறிப் பலி!!

நெடுந்தீவு கிழக்கு தரவைப் பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளின் மத்தியில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்தது. இதனால் எட்டு ஆடுகள் கொல்லப்பட்டன. பத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் காயமடைந்தன.

கடந்த 6 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றதாக அப்பகுதி வாசி ஒருவர் தெரிவித்தார்.

கடற்பகுதியில் இருந்தே இந்த ஷெல் வீச்சு இடம் பெற்றிருக்கிறது. (ஐ-111)

## தவக்காலச் சிந்தனை

# கடவுளின் வழிகள்: அருளும் உண்மையும்

திருவழிபாட்டு ஆண்டின் உச்சக் கட்டம் இயேசுவின் பாடுகள் — சாவு உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறை பொருளைக் கொண்டாடும் தவக்காலமாகும். இக்காலம் இவ்வருடம் 12 - 02 - 97 திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகி 30-03-97 உயிர்ப்பு ஞாயிறுடன் நிறைவடைகிறது.

இவ்வருடம் இக்காலம் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். இன்னும் மூன்று வருடங்களில் 2,000 ஆண்டு வர இருக்கிறது. எதிர்வர இருக்கும் 2,000 ஆண்டு கிறிஸ்து பிறந்த 2000 யூபிலி ஆண்டாகும். இந்த யூபிலி ஆண்டை ஒரு புனித ஆண்டாகக் கொண்டாட 97, 98, 99 ஆம் ஆண்டுகளை ஆயத்த ஆண்டுகளாக கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது.

இந்த ஆண்டிற்குரிய கருப்பொருள்:-

கிறிஸ்துவை தியானித்தல் — அதற்காக வேதாகம ஏடுகளை புதிய ஆர்வத்துடன் வாசித்தல், விசுவாசத்தை புதுப்பித்தல், திருமுழுக்கை மீளக்கண்டு பிடித்தல், இவற்றுக்கு தேவ அன்னையே ஒரு நல்மாதிரி என்பவையாம்.

இவற்றில் ''கிறிஸ்தவ வாழ்வின் மையமாக திருமுழுக்கை மீளக் கண்டு பிடித்தல்'' என்பது இத்தவக்காலத்துக்குரிய கருத்தாகும்.

இத்தவக்காலக் கருத்தை விளக்கும் தவக்கால முதலாம் ஞாயிறு வாரக் கருப்பொருள் ''அருளும் உண்மையும் கடவுளின் வழிகள்'' என்பதாகும்.

தவறு செய்த மனிதன் நாற்பது பகலும் நாற்பது இரவும் பெய்த மழை வெள்ளப் பெருக்கால் அழிக்கப்பட்டபோது நேர்மையானவராகவும் குற்றமற்றவராகவும் இருந்த நோவா காப்பாற்றப்பட்டார். அதன்பின் கடவுள் ''உங்களோடு என் உடன் படிக்கையை நிறுவுகின்றேன்'' (ஆதி. 9 : 11) என்று முழுப் படைப்பையும் உள்ளடக்கும் எல்லாக் காலத்துக்குமான, திருப்பிப் பெற முடியாத உடன்படிக்கையை உறுதி செய்தார்.

மனித மீட்பிற்கான இந்த உடன் பாட்டின் தெய்வீக அர்ப்பணமாக கிறிஸ்து வந்தார். ''...நீதியுள்ள அவர் நீதியற்றவர்களைக் கடவுளிடம் சேர்க்க, எல்லோரின் பாவங்களுக்காக ஒரே முறையாக இறந்தார் '' (1இரா. 3;18)

கிறிஸ்து நிறைவு செய்த இந்த மீட்பு நிகழ்வு கிறிஸ்தவ திருமுழுக்கிலே உணரப்பட்டு, மனிதமயப் படுத்தப்பட்டது.' கிறிஸ்தவ வாழ்வின் மையமாக திருமுழுக்கை மீளக்கண்டு பிடித்தல்'' என்பது, பாடுபட்டு இறந்த கிறிஸ்துவில் நிறைவான மீட்பில் புதிய ஆர்வத்துடன் பங்கு பற்றுதலாகும்.

இந்த பங்கு பற்றுதலுக்கு நாம் கொடுக்க வேண்டிய பதில் ''காலம் நிறைவேறி விட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது... நற்செய்தியை நம்புங்கள்'' (மாற். 1:15) என்னும்இயேசுவின் வார்த்தைகளில் தொகுக்கப்பட்டது.

இதையே இன்றைய நற்செய்தி ஏடுகளில் நாம் வாசிக்கக் கேட்கிறோம். இயேசு திருமுழுக்குப் பெற்றபின் '' தூய ஆவியால் அவர் பாலை வனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். பாலைவனத்தில் அவர் 40 நாள் இருந்தார். அப்போது சாத்தானால் சோதிக்கப்பட்டார்'' (மாற் 1; 12-13). சாத்தானை தோற்கடித்து சோதனையை வென்று கலிலேயாவில் தன்பணியைத் தொடங்குகிறார்.

பணியின் ஆரம்பத்திலே அவர் விடுக்கும் அழைப்பு நற்செய்தியை நம்புங்கள் என்பதாகும்.

இவ்வாறு பார்க்கும்போது அருளும் உண்மையும் கடவுளின் வழிகள் என்பது மிகத் தெளிவாகிறது. முதலாம் வாசகத்திலே வெள்ளப் பெருக்கில் இருந்து நோவா பாதுகாக்கப் படுகிறார். கிறிஸ்து உடன்படிக்கையின் படி தம்மையே பலியாக்கி கடவுளின் அருளையும் உண்மையையும் வெளிப்படுத்துகிறார்.

அருளும் உண்மையும் நிறைந்த கடவுளிடம் எம் மண்ணின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் செபிப்போம்.

அருட்திரு.
ரூபன் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

''யமஹா'' ஜெனரேட்டர் 2600 Watts உடன் விற்பனைக்குண்டு. முகவரி. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம். (9286)

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 154,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9269)

நல்ல நிலையிலுள்ள சொனி ரி. வி. கலர் 2060 நோ— புறொஸ்ரர் டபிள் டோர், சிசில் குளிர்சாதனப் பெட்டிகள், ரீ. டீ. கே. மேசை மின்விசிறி, ஆங்கில ரைப்ரைட்டர் (போட்டபிள் யப்பான்) புதியது என்பன நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. இ. செல்வராஜா, 145, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (45293)

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: லக்கிபாம் புறோயிலர் விற்பனை நிலையம், பலாலி றோட், திருநெல்வேலி. (9282)

### தவறிவிட்டது

30 - 1 - 97 இல் ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி சந்தியில் சிறிய கறுப்பு, நீளமான பை, செல்வரட்னம் எனப் பெயரிடப்பட்ட வங்கி சேமிப்புப் புத்தகம் (25869) கடிதங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். C/o திரு. முத்துக்குமாரசுவாமி, இலங்கை வங்கி (மேல்மாடி), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (45304)

பளை அல்லிப்பளையைச் சேர்ந்த மயில்வாகனம் சனசபை ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, கப்பல் பதிவு இலக்கம், பணம் ஆகியவை கடந்த புதன்கிழமை பளையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பளை தேன்சுரபி உணவகத்தில் ஒப்படைக்கவும். (சி/139)

இராசபாக்கியம் பவானி தேவி என்பவரின் 395811037 V இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் கைதடி—யாழ். வரலேற்கிறது பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 85 பத்திரகாளி கோவிலடி, வண். வடமேற்கு, வண்ணார்பண்ணையில் தயவு செய்து ஒப்படைக்கவும். (45315)

### மணமகன் தேவை

35 வயது, பூராடம் 2 இல் செவ்வாய் ஓரளவு கிரகபாவம் கொண்ட பெண் ஆசிரியருக்கு தனியார், அரசாங்க, சுயதொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு: க. ஸ்ரீகாந்தா, பொற்பதி வீதி, கொக்குவில். (45295)

### அன்பளிப்பு

துணிசனின் இளையூடாகச் செய்யப்பட்ட எண்ணெய்ப் பிசுக்கையும் அழுக்கையும் அகற்றும் நுரைவளம் கொண்ட மில்க்வைற் சலவைத்தூள் 6/-, நீலசோப் 7/-, மெடிக்கேற்றற் 8/-, பார் 20/- வெற்றுப் பக்கற், மேலுறைகளுக்கு அன்பளிப்புகள் ''மில்க்வைற்''. (சி/134)

### வீடு வாடகைக்கு

49, பலாலிறோட், சுந்தர் மடம் என்னும் முகவரியில் உள்ள மேல்மாடி வீடு வாடகைக்கு உள்ளது. தொடர்பு: அசோகா நகைஅகம், 275, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (9278)

புதிய இலக்கம் 629 K. K. S Road (மனோகரா சந்தி), சிறிய வீடு (Annex) வாடகைக்குண்டு. இதே முகவரியில் காலை 8-00 — 12-00 இடையில் தொடர்பு கொள்ளவும். சிறிய நற்குடும்பத்தினர் விரும்பப்படுவர். (9285)

### திருமண சேவை

சைவ போசனம் அல்லது சைவ போசனமாக மாறக் கூடிய ஆண், பெண் சாதகர் குறிப்புடன், விவரங்கள் தேவை. (வெளிநாட்டவரும் கவனிக்கப்படும்) இரகசியம் பேணப்படும். இது ஒரு துரித சேவை. இல 585, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (45297)

### ஆங்கிலம், கணிதம்

விசேடமாக ஒரு அமர்வில் Distinction, Credit பெறு பேறுடைய (ஆண்டு 9, 10 உட்பட) ஆங்கில இலக்கியமும், Spoken English With Grammar கற்பிக்கப்படும். Lond Inter ஆசிரியர் 85, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (45298)

### EASY ENGLISH

ஆங்கிலத்தை இலகுவில் கற்கவும், கற்பிக்கவும் ரீ. எம். அன்றனிப்பிள்ளையின் Easy English 5 தொகுப்புகள் அடங்கிய நூல் விற்பனையாகின்றது. பிரதி நூறு ரூபாய். சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (45231)

### காணி விற்பனைக்கு

அல்லாரை அறுகம்புலப் பிள்ளையார் கோயில் வீதியில் கிணறும் தொட்டியும் தென்னை மரங்களும் கூடிய நல்ல சூழலில் அமைந்த பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (தோட்டம் செய்வதற்கோ, வீடு கட்டுவதற்கோ உகந்தது) தொடர்பு: நேசம் அழகுநகை, பிரதான வீதி சாவகச்சேரி, (சி-131)


## போட்டோஸ்ரற்

தரமான போட்டோ பிரதிகளை
பெரியதாகவோ, சிறியதாகவோ
வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ள

**ஷண்முகா**

65 (185), பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(9288)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 09 — 1984

மறைவு: 17 — 01 — 1997

### செல்வன் துரைராசா துவாரகன்

செந்நெல் மிளிரும் மிருசுவில் தன்னில்
நல்லறம் கொண்ட வேலுப்பிள்ளை மைந்தன்
திரைகடல் ஓடி திரவியம் தேடும் துரைராசா,
செம்மனச்செல்வி சிவலோகநாயகியைச் சேர்ந்தே
நன்மனம் கொண்டே இல்லறம் நடத்து நாளில்
இனிய மைந்தன் சுரேஸ் தன்னையும்
இணையிலாமகன் துஸ்யந்தனையும்
இளைய மைந்தன் துவாரகன் தனையும்
இனிதேபெற்று வாழும் நாளில்
அன்னை அரவணைப்பில் அன்புடன் வளர்ந்த துவாரகன்
ஆரம்பக்கல்வியை மிருசுவிலில் பயின்றே
அடுத்த ஆண்டுகள் நீர்வை C.C.T.M இல் கற்றான்
சுவந்த நிறந்தோன் செந்தமிழ் முகத்தோன்
செம்பாட்டுப் பிள்ளையாரின் சிறந்த அன்பன்
சிவத்தொண்டு செய்யவே சிறந்த மிருசுவில் சென்று
சிலநாள் பயின்று வரு நாளில் செம்மலர் கொய்யவே
அருகில் இருக்கும் அழகிய தடாகம் சென்றான்.
சென்றவன் திரும்பவில்லை சிவனடி சேர்ந்தான்
பெற்றதாயும் தந்தையும் மாமன்மாரும்
மற்றுள்ள உறவினர் யாரும் மனம் கலங்கினர்.
உயர் தாது வருடம் தைத்திங்கள் தன்னில்
வளர் நவமித்திதியாம் வண்ண நாளில்
துயரினைத்தந்தே துவாரகன் தானும்
தும்பிக்கையான் அடிசார்ந்தான் துணிவுடனே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

து. சிவலோகநாயகி
(தாய்)

மிருசுவில் வடக்கு,
மிருசுவில். (9289)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 10 — 1912

மறைவு: 16 — 02 — 1994

அமரர்

### சவிரிப்பிள்ளை மரியாம்பிள்ளை (உடையார்)

எங்கள் பாசமிகு ஐயா!
ஆண்டு மூன்று சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எங்களை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சில்லாலை. (45314)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 19 — 09 — 1943

இறப்பு: 17 — 01 — 1997

திருமதி

### இராஜேஸ்வரி ஞானேஸ்வரன் (சிந்தக்கா)

அன்னாரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கணவர், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பங்குரு ஒழுங்கை,
வட்டுக்கோட்டை. (9280)

## அந்தியேட்டிக் கிரியைகள்



தோற்றம்: 18 — 08 — 1923

மறைவு: 18 — 01 — 1997

அமரர்

### சின்னத்தம்பி அப்புக்குட்டி

உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி அப்புக்குட்டியின் அந்தியேட்டிக் கிரியைகள் 16 - 02 - 97 இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரன், சகோதரிகள்.

உடுப்பிட்டி தெற்கு. (9279)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## தனித்துவம் பேணுதல்

ஜேர்மனியின் இருபத்தைந்து நகரங்களில் பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டு, தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சை நடத்தப் பட்டுள்ளது. இரண்டாம் கல்வியாண்டிலிருந்து பத்தாம் கல்வியாண்டு வரை பயிலும் மாணவர்கள் தமிழ், சமூகக்கல்வி ஆகிய இரண்டு பாடங்களுக்குத் தோற்றினர்.

ஒவ்வொரு வருட இறுதியிலும் இந்தப் பரீட்சையை பொதுப்பரீட்சையாக, தகுதி காண் பரீட்சையாக ஜெர்மன் உலகத் தமிழர் இயக்கம் நடத்தி வருகிறது. பிரஸ்தாப இயக்கம் ஜேர்மனியின் பல பகுதிகளிலும் நடத்தி வரும் 97 தமிழாலயம் (தமிழ்ப்) பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள்.

தமிழாலயங்களில் பயிலும் மாணவர்களுக்கு என்று மட்டுமன்றி, கட்டுப்பாடு எதுவுமின்றி வெளிவாரி மாணவர்களும் பரீட்சைக்குத்தோற்ற வசதி செய்யப்பட்டிருக்கிறது.

ஜெர்மனியில் வசதியும் தமிழ்க் குழந்தைகள், தமிழை மறவாத தமிழராக வளரவேண்டும் என்ற நல்ல நோக்குடனேயே தமிழ் ஊட்டும் இந்தப்பணி நடைபெறுகிறது.

வேற்று நாட்டில் — மேற்கு நாட்டில் வாழ்ந்தாலும் தமிழர்கள், மொழி. சமயம், கலைகள், பண்பாடுகள், கலாசாரங்களைப் பேணித்தமது இனத் தனித்துவத்தைப் பாதுகாப்பதில் வெகு அக்கறையாக, ஆர்வமாக உள்ளதையே இது காட்டுகிறது.

அந்நியச் சூழலில் வாழ்வதால், தமது குழந்தைகளின் மொழி, மத, கலாசாரம் சம்பந்தமான பின்னணியும், அறிவும் அற்றுவிடக்கூடாது என்பதில் அங்குள்ள பெற்றோர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

தமது பிள்ளைகளைக் கண்டித்து. தண்டித்து கட்டுப்பாட்டுடன் வளர்க்க முடியாத புதிய சூழலில் அந்தப் பெற்றோர்கள் வாழ்கிறார்கள் அதனால் தமது குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தையும் நல்லறிவையும் போதிக்கும் சமய கலாசார அறிவை வழங்க வேண்டும் என்ற ஆதங்கம் தெரிகிறது.

தாங்கள் வெளிநாடுகளில் வாழ்வதால் தமது பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் இழந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் மிகக் கவனமாக இருக்கிறார்கள். வாழும் சூழலோடு ஒட்டி தம்மையும். பிள்ளைகளையும் முற்றாக மாற்றி விடக்கூடாது என்ற உணர்வே இதற்குக் காரணம். அந்த உணர்வு மெச்சத்தக்கது.

ஆனால் பிறந்த மண்ணில் சொந்த மண்ணில் வாழும் எம்மவர்கள் தமது தனித்துவத்தைப் பேணுவதை மறந்தவர்களாகிவிட்டனர் இங்குள்ள அரசியல் சூழ்நிலையும் இதற்கு ஒரு காரணம் எனச் சொல்லப்படுகின்றது. எனினும் மொழி, மத, கலை, பண்பாடுகள் கலாசாரங்களை பேணுவதில் வெளிநாடு சென்றவர்களை விட ஒப்பீட்டளவில் இங்குள்ளோர் நாட்டம் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இது ஈழத்தமிழினம் தனது தனித்துவத்தை மறந்து போகும் ஆபத்தான நிலையைத் தோற்றுவிக்கும்.

# பேத்தாழை அகதி முகாமில் தீ!

# 40 குடிசைகள், கொட்டில்கள் நாசம்!!

## ஒருவர் மரணம்; உடைமைகள் அழிவு!

கொழும்பு, பெப். 16

வாழைச்சேனைக்கு அருகே பேத்தாழையில் அமைந்திருந்த அகதிமுகாமில் நேற்று முன்தினம் பெரும் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது.

அந்த முகாமில் இருந்த 10 பெரிய கொட்டில்களும், 40 குடிசைகளும் இதனால் முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகின.

அகதிகளும் அயலவர்களும் இணைந்து தீயை அணைக்க எவ்வளவோ முயற்சித்த போதும் கொட்டில்களும் உடைமைகளும் நாசமாகி விட்டன.

அகதி முகாம் தீயை அணைக்க உடன் முயற்சி செய்யுமாறு வாழைச்சேனைப் பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் சில்வா கல்குடா இராணுவ முகாமுக்கு பணிப்புரை விடுத்தார். ஆனால் இராணுவத்தினர் அவ்விடத்துச் சென்று சேருவதற்கு முன்னரே அகதி முகாமை தீ நாசமாக்கியுள்ளது.

கொட்டில் ஒன்றுக்குள் தங்கியிருந்த செல்வநாயகம் ஞானப்பிரகாசம் [வயது 50] என்பவர் தீயில் கருகி மரணமானார். இவர் ஒரு நோயாளி எனத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வடமுனை, ஊத்துச்சேனை, புணானை, மயிலந்தனை போன்ற எல்லைக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக இந்த பேத்தாழை அகதி முகாமிலேயே வசித்து வந்தனர்.

இத் தீ அனர்த்தத்தினால் அகதிகள் அனைவரும் தம் உடைமைகளை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீன்பிடி வலைகள் அபகரிப்பு!

செம்பியன்பற்று, பெப். 16

வடமராட்சி கிழக்குப்பகுதியில் கடற்றொழிலாளர்களின் மீன்பிடி உபகரணங்கள் திருடப்படுவது சமீபகாலமாக அதிகரித்திருக்கிறது.

கடந்த ஒருவார காலத்தில் பத்துக்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

தாம் தொழிலில் ஈடுபடும் கடற்கரைப் பகுதிகளிலேயே உபகரணங்களை வைத்திருக்கும் மீனவர்கள் இத் திருட்டுக்களினால் பாதிக்கப்படுகின்றனர்.

ஊரடங்கு அமுலில் உள்ள இரவு வேளைகளில் வலைகள் அபகரித்துச் செல்லப்படுகின்றன. மாமுனை, செம்பியன் பற்று ஆகிய இடங்களிலேயே அதிகளவு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. (ஐ-36)

## உரிய வசதிகள் இன்றி சாவகச்சேரி ஆஸ்பத்திரி!

### நிர்வகிக்க டாக்டர்களும் இல்லை

பெரும் எண்ணிக்கையான மக்கள் சிகிச்சை பெறச் செல்லும் தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான ஆதார வைத்தியசாலையான சாவகச்சேரி ஆஸ்பத்திரி போதிய வசதிகள் இன்றிப் பின் தங்கிய நிலையிலேயே இன்னமும் காணப்படுகிறது.

ஆஸ்பத்திரியை நிர்வகிக்க பொறுப்பான வைத்திய அதிகாரி ஒருவர் கூட அங்கு இல்லை.

ஆஸ்பத்திரிக்குரிய போதிய வளங்கள் அங்கு உள்ளன. ஆனால் டாக்டர்கள் பற்றாக்குறை தொடர்ந்து நிலவுகின்றது.

அத்துடன் அம்புலன்ஸ் வண்டி வசதியும் அங்கு இல்லாததால் அவசர நோயாளர்களை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முடியாதுள்ளது.

ஆஸ்பத்திரியில் உரிய கண்காணிப்பு நடவடிக்கை இல்லாததால் சமீப காலமாக அங்கு திருட்டுக்களும் இடம் பெற்றிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. (ஐ-31)

## கெரில்லா இயக்கம் ஒன்றை முற்றாக அழித்துவிட முடியாது

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, பெப் 16

விடுதலைப் புலிகள் இராணுவரீதியில் பலவீனப் படுத்தப்பட்டிருப்பது உண்மையே. ஆனால் கெரில்லா இயக்கம் ஒன்றை முற்று முழுதாக அழித்தொழிப்பது என்பது என்றும் சாத்தியமானதல்ல. எனவே தான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு புலிகளையும் அழைக்க வேண்டி உள்ளது.

— ஈ. பி. ஆர். எல். எவ் வின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் தொடர்பாக வவுனியாவில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார்.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களது உயிர்களைப் பலிகொண்டு, பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை நாசமாக்கியுள்ள இந்த யுத்தத்துக்கு ஒரு முடிவு கட்டப்படவேண்டும்.

நாட்டில் மட்டுமல்ல சர்வதேசரீதியாகவும் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர். இந் நிலையில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகியுள்ளது.

— இவ்வாறு பிரேமச்சந்திரன் அங்கு மேலும் தெரிவித்தார். (ஐ-150)

## மதுபுகைபிடித்தல் காட்சிகளுக்குத் தடை

கொழும்பு, பெப். 16

தொலைக்காட்சி நாடகங்களில் புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற காட்சிகளைக் காண்பிப்பது நேற்று முதல் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக தொடர்பு சாதன, உல்லாசப் பயண விமானப் போக்குவரத்து அமைச்சர் சகல தொலைக்காட்சி சேவைகளுக்கும் பணிப்புரை விடுத்துளளார்.

## அரச ஊழியருக்கு நிபந்தனை

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது உள்ளூராட்சி சபை உறுப்பினராக அரச ஊழியர் ஒருவர்தெரிவு செய்யப்பட்டால்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்குரிய பிரதேசத்தில் உள்ள அரச அலுவலகத்தில் தொடர்ந்து பணியாற்ற அவர் அனுமதிக்கப்பட மாட்டார். வேறு இடத்துக்கு அவர் இடமாற்றம் செய்யப்படுவார்.

— இத்தகைய சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ளது. (உ-150)

## சண்டிலிப்பாயில் இனந்தெரியாத சடலம்

சண்டிலிப்பாய், சங்கானை பிரதானவீதி, மனோன்மணி அம்மன் கோயிலடியில், துப்பாக்கிச் சூட்டுக்குஇலக்கான, இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம்காணப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியூடாக இடம்பெறும் போக்குவரத்துக்கள் சிலமணிநேரம் தாமதம்டைந்தன, (இ-15)

## வெளிவாரி பட்டப்படிப்புவசதி

வடமராட்சிப் பகுதி வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் நலன்கருதி கல்விப் போதனை இப்போது பருத்தித்துறையை அண்மித்த பாடசாலைகளில் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

பரீட்சைகள் நெருங்குவதால், தாம் முன்னர் பயின்ற நிறுவனத்தின் நிர்வாகப் பிரச்சினை தமது கல்வியைப் பாதித்துவிடக்கூடாது என்பதற்காக, மாணவர்களாகிய தாமே விரிவுரையாளர்களின் ஒத்துழைப்புடன் புதிய ஏற்பாட்டைச் செய்திருப்பதாக அவர்களின் பிரதிநிதிகள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

புதிய நிர்வாகிகள் பதவியேற்று நிறுவனத்தை நடத்துவதற்கு வசதிசெய்யப்படும் வரை, பிரச்சினை தீரும் அறிகுறி இல்லை என்றும், அதுவரை கல்விப் போதனை பாதிக்கப்படக்கூடாது என்பதே தமது நோக்கம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-15)

# அரசு - புலிகள் உறவு

# சுலபமான காரியம் அல்ல

## தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு. பெப். 16

" அரசு - புலிகள் உறவை ஏற்படுத்துவது சுலபமான காரியம் அல்ல. இரு தரப்பும் நம்பிக்கை வைத்து இறங்கினால் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற முழு நம்பிக்கை எனக்கு உண்டு "

' நவமணி ' இதழுக்கு அளித்த பேட்டியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரம் இந்தியாவின் கைகளில் இல்லை என்பது இப்போது தெளிவானது.

தமிழ் மக்களின் எதிர்காலம் புலிகள், அரசு ஆகிய இருதரப்பினரின் கைகளில் தான் உள்ளது.

புலிகளுடன் பேச்சு நடத்தும் விடயத்தில் என்ன நடவடிக்கையை மேற்கொள்ள அரசு எண்ணியுள்ளது என்பதை அறிய ஆவலாயுள்ளேன்.

இந்த விடயத்தில் உதவுவதற்குத் தயாராக இருக்கும் எனது நல்லெண்ணத்தை அரசுக்குத் தெரிவித்துள்ளேன். அதனைப் புரிந்துகொண்டுள்ள அரசிடமிருந்து எனக்கு எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

இரு தரப்புப் பேச்சை ஆரம்பிப்பதற்குச் சாதகமாக அரசு பதில் தருமானால் அதற்கான முயற்சிகளில் ஈடுபட நான் தயாராக இருக்கின்றேன்.

இலங்கை விடயத்தில் தலையீடு செய்வதில்லை என் [illegible] டன் நல்லெண்ண அடிப்படையிலான பரஸ்பர உறவைப் பேணவே இந்தியா விரும்புகின்றது.

எனவே தமது விடயத்தில் இந்தியா தலையிடும் எனத் தமிழ் மக்கள் இன்றைய சூழ்நிலையில் எதிர்பார்க்கக் கூடாது.

இலங்கைத் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசுக்கு இல்லாத தார்மீகப்பொறுப்புஇந்திய அரசுக்கு இருக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இந்தப் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது என்பதைப் புலிகளும் அரசும் உணர வேண்டும்.

உடனடியாக யுத்த நிறுத்தம் செய்து பேச்சுக்கான வழிமுறைகளை இரு தரப்பும் செய்ய வேண்டும்.

இந்த விடயத்தில் என்ன செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்வதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தயாராக இருக்கின்றது — என்றார். (உ-150)

## நாளை

**மாசி 6**

**திங்கட்கிழமை**

**திதி:** தசமி முற்பகல் 8- 27 வரை.

**நட்சத்திரம்:** மிருகசீரிடம் நண்பகல் 12-13 வரை.

**ராகுகாலம்:** 8.03-9.33

**சுபநேரம்:** 12.33-2- 03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிலுநர் தேவை

புளொக் தயாரிப்பில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 22-02-97 க்கு முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
அருண் புளொக் தயாரிப்பாளர்கள்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு பொன்னுச்சாமிப்பத்தர்

யாழ். ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகரும், போஷகரும், முன்னாள் தலைவரும் ஆகிய முருகேசு பொன்னுச்சாமிப் பத்தர் அவர்கள் 13 - 02 - 97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசபூபதியின் அன்புக் கணவரும், பொன்ராஜ் (முன்னாள் ஆசிரியர், தற்பொழுது சுவிஸ்) அவர்களின் அன்புத் தந்தையும், இன்பகுமாரியின் அன்பு மாமனாரும், கலைச்செல்வி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), குகராஜ் (மாணவன், சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி, இந்திராணி மற்றும் நல்லம்மா, இராசமணி, செல்லக்கண்டு, தங்கரெத்தினம், குமாரசாமி (ஆசிரியர், மாலைதீவு) ஆகியோரின் சகோதரனும், அருள்ராஜின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 46, கோவில் வீதி இல்லத்தில் இன்று (16 - 02 - 97) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் காலை 9-00 மணியளவில் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. பொன்ராஜ்
46, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (45326)

## வைத்திலிங்கம் தர்மலிங்கம்

வைத்திலிங்கம் தர்மலிங்கம் 15. 02. 97இல் இறைபதமடைந்துவிட்டார். அன்னார் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய ஓவசியர் வைத்திலிங்கம், இலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், பூங்கோதை (ஹொலண்ட்) கோகுலன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாலன் (ஹொலண்ட்) அவர்களின் அன்புமாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 92, பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (16. 02. 97) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. பாலாம்பிகை
(மனைவி)
92, பலாலி வீதி,
திருநெல்வேலி. (45323)

## சந்தையா நமசிவாயம் (புராணிகர்)

மீசாலை கிழக்கைச் சேர்ந்த கந்தையா நமசிவாயம் 15-02-97 இல் காலமானார்.

இவர் சிதம்பரம்மாவின் அன்புக் கணவரும், கார்த்திகேசு (ப. நோ. கூ. சங்கம் — பளை), யோகாம்பிகை, கமலாம்பிகை (கொழும்பு), சாம்பசிவம் (ஆஸ்திரேலியா), சிவயோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதிப்பிள்ளை (உபதபாலதிபர், முகமாலை), கணபதிப்பிள்ளை, அண்ணாமலை (ஓய்வுபெற்ற கிளறிக்கல்), சரோஜாதேவி (ஆஸ்திரேலியா), ராஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையாவின் ஏகபுத்திரனும், இளங்கோ (சுவிஸ்), மஞ்சுளா (சுவிஸ்), யமுனா (லண்டன்), நர்மதா, உமாஜெயந்தி (ஆசிரியை), ஜெகதீசன் (கொழும்பு), சுரேசன் (கொழும்பு), அஜந்தி (மாணவி), கௌரி (ஆசிரியை), சபேசன் (கனடா), மயூரன் (லண்டன்), மைதிலி (4 ஆம் வருட மருத்துவ பீட மாணவி), அருணா (கொழும்பு), அபிராமி (ஆஸ்திரேலியா), நித்தியா (ஆஸ்திரேலியா), விக்ரம் (ஆஸ்திரேலியா), தஷ்சனா (லண்டன்), கணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (16-02-97) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பகல் 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்சாக சொற்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
யோகாம்பிகை கணபதிப்பிள்ளை
(மகள்)
(45322)

### மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள [illegible] அவர்களது பணிமனையில் 16 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஐ. தே. க. ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் சந்தேகநபர்கள் மறைந்திருக்கலாம் என்று பொலீஸார் கருதுகின்றனர்.

நேற்று சோதனையிடப்பட்ட ஐ. தே. க. அரசியல் உயர் பிரமுகர்களின் வீடுகளில் ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளையின் வீடும் ஒன்றாகும்.

மற்றும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் காமினி லொக்குகே, மேவின் சில்வா ஆகியோரின் வீடுகள் சோதனையிடப்பட்டுள்ளன.

ஏற்கனவே அனுராபண்டார நாயக்காவின் வீடு சோதனையிடப்பட்டது தெரிந்ததே. (இ-3-5)

## 34 பேரின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கண்ணதாசன் இராமநாதபிள்ளை கைதடி, நாவற்குழி

★ கதிரமலை ரவீந்திரன் (நாவற்குழி தெற்கு, கைதடி) இவர் ஜனவரி மாதம் அனுராதபுர நீதிமன்றத்தில் விடுதலையானார்.

★ ஆறுமுகம் ரவி (இல 10, சின்னஆலம்வீதி, அரியாலை)

★ பூபாலசிங்கம் விஜயகரன் (உரும்பிராய் மேற்கு.)

★ தியாகராசா விக்கினேஸ்வரன் (தனங்கிளப்பு.)

★ நாகமுத்து பிரபாகரன் (தனங்கிளப்பு)

★ நிமலன் இராசநாயகம் (மாரிமுத்து அம்மன் கோயில் வீதி, மட்டுவில் தெற்கு)

★ சின்னராசா ரவீந்திரன் (இடைக்குறிச்சி வரணி,)

★ செல்லையா ஜெகதீஸ்வரன் (மீசாலை.)

★ மாணிக்கம் சுப்பிரமணியம் (புலோலி தெற்கு)

★ விஜயகுமார் செல்லையா (கோப்பாய்வடக்கு.)

★ திருநாவுக்கரசு சர்வேஸ்வரன் (தனங்கிளப்பு.) இவர் 11. 12. 96இல் அனுராதபுரம் நீதிமன்றத்தில் விடுதலையானார்.

★ விக்கினேஸ்வரன் நல்லதம்பி (பாலபத்தினி றோட், கோப்பாய்.)

இவர்கள் தொடர்பான விவரங்களை யாழ் ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஒரே தடவையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேசன்துறைக்கும் இடையில் தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள மூன்று கப்பல்களுக்கும் மேலதிகமாக ''சஜிந்த'' என்ற கப்பலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த நான்கு கப்பல்கள் மூலமாகவும் ஆயிரம் பயணிகள் அனுப்பப்படுவர் என்றும் — அவர் தெரிவித்தார்.

அதே நேரம் — ''சஜிந்த'' சப்பலுக்கு 381 உயிர் காப்பு மிதப்புக்கள் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

கடந்த தடவை இக்கப்பல் காங்கேசன் துறைக்கு சென்ற சமயம், அக்கப்பலில் இருந்த உயிர்காப்பு மிதப்புக்கள் அங்குவைத்து எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-5)

# விமானங்கள் - ஹெலிகள் இரவில் வவுனியாவில் தரிப்பது நிறுத்தம்

## அனுராதபுரம் செல்கின்றன

வவுனியா நகரப்பகுதியில் உள்ள படைமுகாம்கள் நோக்கி விடுதலைப் புலிகள் ஆட்லறி தாக்குதல்கள் நடத்துவதைத் தொடர்ந்து வவுனியா விமான நிலையத்தில் விமானங்கள் மற்றும் ஹெலிகள் இரவு நேரத்தில் தரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் விடுதலைப் புலிகள் வவுனியா நகர் நோக்கி ஏவிய 24 ஷெல்களில் 22 ஷெல்கள் விமான நிலையப் பகுதியிலேயே வீழ்ந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

பகல் நேரங்களில் வவுனியா விமான நிலையத்தில் தரித்து நிற்கும் விமானங்கள், ஹெலிகள் மாலையானதும் அநுராதபுரம் நோக்கிச் செல்கின்றன.

இதேவேளை — விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து வவுனியாவில் படையினர் தமது பாதுகாப்புக்காக பதுங்குகுழிகளை வெட்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## கல்வி நிர்வாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய போதிய அநுபவம் வாய்ந்த — சேவை மூப்புள்ள — அதிகாரிகள் இல்லாத காரணத்தாலும் —

இந்த மாற்றங்களுக்கு ஏற்ப உருவாக்கப்படவுள்ள புதிய வலய அலுவலகங்களுக்கான அலுவலர்கள் இல்லாத காரணத்தாலும் — இந்த நிர்வாக மாற்றங்களைத் தற்போதைக்கு மேற் கொள்வதில்லை என்று மாகாண சபை கல்வியமைச்சு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ- 3)

## ஐ. தே. கவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழு ஒன்றின் முதன்மை வேட்பாளராக கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவது தெரிந்ததே.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களும் இந்த சுயேச்சைக் குழுவிலேயே போட்டியிடுகின்றனர். [உ-150]

## இரத்தினபுரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையை அங்கிருந்த றோய்ட்டர் செய்தியாளர் பின்வருமாறு தெரிவித்தார்.

''தற்போது நகரில் பல இடங்களில் தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெறுகின்றனபோன்று தெரிகிறது. பல இடங்களில் கரும்புகை வானைநோக்கி எழுவதை அவதானிக்க முடிகிறது.

மக்கள் பொலீஸ் நிலையத்தைத் தாக்குகிறார்கள். வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களுக்கு தீ வைக்கப்படுகிறது. காலை கடை ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டது. அந்தக் கடை முற்றாக எரிந்து சாம்பலானது. கடைக்குள் இருந்த கடைச்சிப்பந்தி எரிந்து இறந்துள்ளார்.

எதிர்த்தரப்பு ஆதரவாளர்களிடையே இடம்பெறும் மோதல்களிலும் பார்க்க பொலீஸார் மீது மக்கள் மேற்கொள்ளும் தாக்குதல் சம்பவங்களே அதிகமாக உள்ளன.

இறுதிச் சடங்கு நிகழ்வுகளுக்குப் பின்னர் நிலைமை இன்னும் மோசமாகலாம். உணர்ச்சி வசப்பட்ட மக்களை பொலீஸார் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருப்பதை என்னால் அவதானிக்க முடிகிறது.''

இவ்வாறு றோய்ட்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

# கேள்வி அறிவித்தல்

## தேசியப் பாடசாலைகள்

### யா/பாழ். மத்திய கல்லூரி
### யா/வேம்படி பெண்கள் உயர் பாடசாலை

1997-01-19, 1997-01-28 ஆகிய உதயன் இதழ்களிற் பிரசுரமான இக் கேள்வி அறிவித்தல்களிற் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு தேசிய பாடசாலைகளின் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை ஏற்கும் நேரம் 97 - 02 - 26 ஆம்திகதி புதன்கிழமை காலை 10.00 மணி வரையிலும், கேள்விப் பத்திரங்களைத் திறக்கும் நேரம் அன்றைய தினம் காலை 10.30 மணி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளதென்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

சு. இரத்தினராசா
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயம் 01.

கல்வித் திணைக்களம்,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். 1997-02-14 (சி/142)


# 21 ஆம் நூற்றாண்டுக்குரிய பொது மனித இலக்கியம்

சகோதர! சகோதரிகளே!

பேனா கொண்டு பிறந்து விட்டேன், துணிந்துவிட்டேன் கொடும் மாயவலையை உடைத்தெறிய, சுவாமி விவேகானந்தர் எம்மண்ணில் கால்பதித்த நூற்றாண்டு நினைவு நிலை நிற்க புறப்பட்டுவிட்டேன் சமத்துவ இலக்கியம் தர, சிலுவை சுமந்த நாதர் நினைவு 21 ஆம் நூற்றாண்டை எட்டிநிற்கும் வேளை தனில் தூக்கிவிட்டேன். மனித நேயத்தைக் கட்டியெழுப்ப, பொய்யும் பிரட்டும் போக்கிரி வாதம் ஆக்கிய அணுவால் இறைவன் பேரால் உலகை அழிக்கத் துணியும் அறியாமைப்பேயை விரட்ட தந்துவிட்டேன்.

## "புதிய கருத்துக்கள்"

என்னும் தொடர் நூல்

## இது புதிய யுகத்திற்கான அடித்தளம்

வெளிவந்துவிட்டது! உண்மையை அறிய முந்துங்கள்!!

(45219)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org